தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மதிப்பீட்டுக் குழு
(2018 – 2020)

(பதினைந்தாவது பேரவை)

பதினேழாவது அறிக்கை

(பேரவைக்கு அளிக்கப் பெற்ற நாள் : 24 MAR 2020)

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

சட்டமன்றப் பேரவைச் செயலகம்
சென்னை – 600 009.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மதிப்பீட்டுக் குழு
(2018 – 2020)



(பதினைந்தாவது பேரவை)

பதினேழாவது அறிக்கை

"பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து / மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள்" (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை) குறித்து 2016–2018 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழு பேரவைக்கு அளித்த ஏழாவது அறிக்கையில் (பதினைந்தாவது பேரவை) கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் மீதான அறிக்கை.

பொருளடக்கம்

பக்கங்கள்

2018–2020 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவின் அமைப்பு ... iii

I. முன்னுரை ... v

II. அறிக்கை ... vii

III. இணைப்புகள்

இணைப்பு – 1 நிறைவேற்றப் பெற்றதாகக் கருதப்பெற்றவை 1–5

இணைப்பு – 2 துறையின் பதில்கள் குழுவால் ஏற்றுக் கொள்ளப் பெற்றவை 6–12

இணைப்பு – 3 குழு மேலும் தொடர விரும்புபவை 13–23

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மதிப்பீட்டுக் குழு (2018–2020)

(பதினைந்தாவது பேரவை)

(5.7.2018–ஆம் நாள் அமைக்கப்பெற்று 31.03.2020 வரை நீட்டிக்கப்பட்டது)

தலைவர்

1. திரு. தோப்பு என்.டி. வெங்கடாச்சலம்

உறுப்பினர்கள்

2. மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்,
துணை முதலமைச்சர் (அலுவல் காரணமாக)

3. திரு. துரைமுருகன்,
தலைவர், பொதுக் கணக்குக் குழு (அலுவல் காரணமாக)

4. திரு. S. செம்மலை,
தலைவர், பொது நிறுவனங்கள் குழு (அலுவல் காரணமாக)

5. திரு. C.V. இராஜேந்திரன்

6. திரு. இ. கருணாநிதி

7. திரு. ஆர். காந்தி

8. திரு. V.S. காளிமுத்து

9. திருமதி ப. சத்யா

10. திரு. சி. சந்திரசேகரன்

11. திரு. எஸ்.எஸ். சரவணன்

12. திரு. M. செல்வராசு

13. திரு. அ. நடராஜன்

14. திரு. பெ. பெரியபுள்ளான் (எ) செல்வம்

15. முனைவர் க. பொன்முடி

16. திரு. கி. மாணிக்கம்

17. திரு. M.K. மோகன்

18. திரு. வி.ஜி. ராஜேந்திரன்

19. திரு. வாகை சந்திரசேகர்

செயலகம்

திரு. கி. சீனிவாசன் . . செயலாளர்

திரு. அ. அய்யன்பெருமாள் . . இணைச் செயலாளர்

திரு. க.லோ. சிவகுமரன் . . துணைச் செயலாளர்

I. முன்னுரை

1. "பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து / மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள்" (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை) குறித்து 2016–2018 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழு (பதினைந்தாவது பேரவை) 5.7.2018–ஆம் நாளன்று பேரவைக்கு அளித்த ஏழாவது அறிக்கையில் அடங்கியுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் மீதான பதினேழாவது அறிக்கையை குழு 2018–2020 (பதினைந்தாவது பேரவை) அதிகாரம் அளித்தவாறு மதிப்பீட்டுக் குழுவின் தலைவராகிய நான் குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

குழு 19.3.2020–ஆம் நாளன்று சென்னையில் கூடி மேலே பத்தி 1–இல் குறிப்பிடப்பட்டுள்ள அறிக்கையில் அடங்கியுள்ள பரிந்துரைகள் மீது அரசு எடுத்த நடவடிக்கைப் பட்டியலை ஆய்வு செய்து இவ்வறிக்கைக்கு ஒப்புதல் அளித்தது.

குழுவின் பணிகளுக்கு பெரிதும் உதவிய சட்டமன்றப் பேரவைச் செயலாளர் அவர்களுக்கு குழு தனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறது.

சென்னை – 600 009,
நாள்: 19.3.2020,
விகாரி, பங்குனி–6,
திருவள்ளுவர் ஆண்டு–2051.

தோப்பு என்.டி. வெங்கடாச்சலம்,
தலைவர்,
மதிப்பீட்டுக் குழு.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

II. அறிக்கை

"பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து / மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள்" (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை) குறித்து 2016–2018 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழு (பதினைந்தாவது பேரவை) பேரவைக்கு அளித்த ஏழாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் மீதான குழுவின் அறிக்கை.

*****

1. 2016–2018 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழு பேரவைக்கு அளித்த ஏழாவது அறிக்கையில் (15–வது பேரவை) கண்டுள்ள 25 பரிந்துரைகளில் 6 பரிந்துரைகள் அரசால் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பெறுகின்றன. அவை இணைப்பு 1–இல் பட்டியலிடப்பெற்றுள்ளன.

7 பரிந்துரைகள் குறித்து அரசு அளித்துள்ள பதில்கள் குழுவால் ஏற்றுக்கொள்ளப் பெற்றிருக்கின்றன. இவை பற்றிய விவரங்கள் இணைப்பு 2–இல் பட்டியலிடப்பெற்றுள்ளன.

12 பரிந்துரைகள் மீது அரசு மேலும் நடவடிக்கை தொடர வேண்டுமென குழு முடிவு செய்துள்ளது. இவை பற்றிய விவரங்கள் இணைப்பு 3–இல் பட்டியலிடப்பெற்றுள்ளன.

2. இணைப்பு 3–இல் கண்டுள்ள குழு தொடர விரும்பும் பரிந்துரைகள் மீது துறை உரிய நடவடிக்கை எடுத்து 2 மாத காலத்திற்குள் விவர அறிக்கை அனுப்பப்படவேண்டுமென்று குழு விரும்புகிறது.

சென்னை – 600 009,
நாள்: 19.3.2020,
விகாரி, பங்குனி–6,
திருவள்ளுவர் ஆண்டு–2051.

தோப்பு என்.டி. வெங்கடாச்சலம்,
தலைவர்,
மதிப்பீட்டுக் குழு.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

III. இணைப்புகள்

இணைப்பு – 1

நிறைவேற்றப் பெற்றதாகக் கருதப்பெற்ற பரிந்துரைகள்

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)	துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
1	10	32	மருத்துவமனைக்கு வருகை தரும் நோயாளிகள் நலன் கருதி மருத்துவமனையில் உள்ள மருத்துவர்களின் காலிப்பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டும் என்பதே குழுவின் கருத்தாகும். சாத்தூர் அரசு மருத்துவமனைக்கு துறையால் தெரிவிக்கப்பட்டது போல் துரித நடவடிக்கையினை மேற்கொண்டு மருத்துவர்கள் காலிப்பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.	விருதுநகர் மாவட்டத்தில் உள்ள மொத்த மருத்துவமனைகளின் எண்ணிக்கை 11 ஆகும். அதில் விருதுநகர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் ஒப்பளிக்கப்பட்ட 64 அரசு மருத்துவர் பணியிடங்களில் 64 மருத்துவர்களும், அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனையில் ஒப்பளிக்கப்பட்ட 27 மருத்துவமனைகளில் 27 மருத்துவர்களும், இராஜபாளையம் அரசு மருத்துவமனையில் ஒப்பளிக்கப்பட்ட 26 மருத்துவர் பணியிடங்களில் 26 மருத்துவர்களும், ஸ்ரீவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் ஒப்பளிக்கப்பட்ட 18 மருத்துவர் பணியிடங்களில் 18 மருத்துவர்களும், சிவகாசி அரசு மருத்துவமனையில் ஒப்பளிக்கப்பட்ட 21 மருத்துவர் பணியிடங்களில் 18 மருத்துவர்களும், காரியாபட்டி அரசு மருத்துவமனையில் ஒப்பளிக்கப்பட்ட 6 மருத்துவர் பணியிடங்களில் 6 மருத்துவர்களும், கள்ளமநாயக்கன்பட்டி அரசு மருத்துவமனையில் ஒப்பளிக்கப்பட்ட 7 மருத்துவர் பணியிடங்களில் 7 மருத்துவர்களும், திருச்சூர் அரசு மருத்துவமனையில் ஒப்பளிக்கப்பட்ட 6 மருத்துவர் பணியிடங்களில் 6 மருத்துவர்களும், வத்திராயிருப்பு அரசு மருத்துவமனையில் ஒப்பளிக்கப்பட்ட 10 மருத்துவர் பணியிடங்களில் 10 மருத்துவர்களும், சாத்தூர் அரசு மருத்துவமனையில் ஒப்பளிக்கப்பட்ட 19 மருத்துவர் பணியிடங்களில் 17 மருத்துவர்களும், திருத்தங்கல் அரசு மருத்துவமனையில் ஒப்பளிக்கப்பட்ட 6 மருத்துவர் பணியிடங்களில் 6 மருத்துவர்களும் பணியில் உள்ளார்கள். மேலும், காலிப்பணியிடங்கள் எதிர்வரும் கலந்தாய்வின் மூலம் நிரப்பப்படும். (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அ.சா.கு.எண் 38572/எஸ்2/2018–6, நாள் 4.11.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)	துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
2	12	36	மாதவரத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மகப்பேறு மருத்துவர் காலிப்பணியிடத்தினை நிரப்பவும் மோரைப் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கவும் குழு பரிந்துரை செய்கிறது.	மாதவரத்தில் உள்ள அரசு மருத்துவமனைக்கு ஒப்பளிக்கப்பட்ட 6 மருத்துவர் பணியிடங்களில் 6 மருத்துவர்களும் நிரப்பப்பட்டு பணியில் உள்ளனர். அம்மருத்துவமனையில் மேற்குறிப்பிட்ட 6 மருத்துவர்களில் 1 மகப்பேறு மருத்துவரும் பணியில் உள்ளார். மோரைப் பகுதியில் அரசாணை எண். 91, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, நாள் 20.03.2018–இன் வாயிலாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்பட்டு கட்டிட பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அ.சா.கு.எண் 38572/எஸ்2/2018–6, நாள் 4.11.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
3	13	39	வடமலாபுரம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச்சுவர் அமைக்கப்பெற வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
விருதுநகர் மாவட்டம், சிவகாசி ஊராட்சி ஒன்றியம், வடமலாபுரம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச்சுவர் கட்ட 2019–2020–ஆம் ஆண்டில் ரூ.24.30 இலட்சம் நிதி ஒதுக்கீடு அளிக்கப்பட்டு பொதுப்பணித்துறை மூலம் சுற்றுச்சுவர் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அ.சா.கு.எண் 38572/எஸ்2/2018–6, நாள் 4.11.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
4	19	59	ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு வருகை தரும் கர்ப்பிணிப் பெண்கள் அமரும் வகையில் போதுமான இருக்கை வசதியினை மருத்துவமனைகளில் செய்துதர வேண்டும் என்று துறைக்கு குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
புதிதாக ஆரம்பிக்கப்படும் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மரத்தளவாடங்களுக்காக மாநில நிதியின் கீழ் ரூ.30,000/– நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அந்தந்த ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு இருக்கை வசதிகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு வழங்கப்பட்டுள்ளன. மேலும், தேசிய நலத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் ரூ.1.75 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் வரும் கர்ப்பிணி பெண்கள் மற்றும் நோயாளிகள் அமரும் வகையில் தேவையான அளவு இருக்கை வசதிகள் செய்யப்பட்டுள்ளன. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அ.சா.கு.எண் 38572/எஸ்2/2018–6, நாள் 4.11.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
5	20	62	அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள 9 அரசு மருத்துவமனைகள் நீங்கலாக இதர மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளிலும் மேற்படி பிரிவின் அலகு (Unit) துவங்கப்பெற வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்
(5)

அரசாணை எண்.179, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, நாள் 14.05.2018–ன்படி, Tamil Nadu Accident and Emergency Care Initiative (TAEI) திட்டம் மூலமாக 9 அரசு மருத்துவமனைகளில் (Trauma Care Centre) தலைக்காய சிகிச்சை பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. அதில் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகளான கிருஷ்ணகிரி, திண்டுக்கல் மற்றும் கோவில்பட்டி ஆகிய மருத்துவமனைகளில் (Level-II Trauma Care Centre) நிலை 2 தலைக்காய சிகிச்சை பிரிவிற்கு நிரந்தர மருத்துவர்கள், செவிலியர்கள், நுண்கதிர் வீச்சாளர் மற்றும் நுண்கதிர் படப்பிடிப்பாளர் ஒப்பளிப்பு செய்யப்பட்டு அப்பணியிடங்கள் நிரப்பப்பட்டு உள்ளன. மேலும், 29 மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளிலும் தலைக்காய சிகிச்சை பிரிவு செயல்பட்டு வருகிறது. 26 அரசு தாலுக்கா மருத்துவமனைகளிலும் தலைக்காய சிகிச்சை பிரிவு செயல்பட்டு வருகிறது. மேலும், அரசாணை எண்.246, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, நாள் 31.05.2019–இன்படி மொத்தம் 31 அரசு மருத்துவமனைகளில் தலைக்காய சிகிச்சை பிரிவுக்கு கூடுதல் கட்டிட வசதிகள் ஏற்படுத்த ஏதுவாக ரூ.1280/– இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு அதற்கான கட்டிட பணிகள் தற்போது பொதுப்பணித் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அ.சா.கு.எண் 38572/எஸ்2/2018–6, நாள் 4.11.2019)

குழுவின் குறிப்புரை
(6)

நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்	துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
6	25	80	அதிக நோய் தாக்கமுள்ள 87 வட்டாரங்களில் தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களை கண்டறிந்து உரிய சிகிச்சையினை விரைந்து அளித்து அவர்களின் நோயின் தாக்கத்திலிருந்து விடுபட துறை தூரித நடவடிக்கையினை மேற்கொள்ள குழு பரிந்துரை செய்கிறது.	கடந்த ஆண்டு 2018 ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் தமிழ்நாட்டில் தொழுநோய் தாக்கம் அதிகம் காணப்பட்ட 87 வட்டாரங்களில், மதிப்பீட்டுக் குழு பரிந்துரையின்படி தீவிர தொழுநோய் கண்டுபிடிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இப்பணியில் 99,47,618 நபர்கள் பரிசோதிக்கப்பட்டனர். இதன் மூலம் 684 புதிய தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் கண்டுபிடிக்கப்பட்டனர். இவர்களில் ஆரம்ப நிலை பாதிப்பு உள்ள (Pauci Bacillary Leprosy) 551 நபர்களும், நோய் கிருமி தாக்கம் அதிகமுள்ள (Multi Bacillary Leprosy) 133 நபர்களும் கண்டுபிடிக்கப்பட்டனர். கண்டுபிடிக்கப்பட்டவர்களில் 182 நபர்கள் சிறுவர்கள் மற்றும் 13 நபர்கள் தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் கூட்டு மருந்து சிகிச்சை (Multi Drug Therapy) அளிக்கப்பட்டு குணப்படுத்தப்பட்டனர். களப்பணி மேற்கொள்ளப்பட்ட 87 வட்டாரங்களில் தொழுநோய் பற்றிய விழிப்புணர்வு பணிகள், நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அ.சா.கு.எண் 38572/எஸ்2/2018–6, நாள் 4.11.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு – 2

பரிந்துரைகளுக்கான துறையின் பதில்கள் குழுவால் ஏற்றுக்கொள்ளப்பெற்றவை

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)	துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
1	3	12	அரசு முதன்மைச் செயலாளர் தெரிவித்தது போல் மேற்படி மருத்துவமனையை விதிகளுக்குட்பட்டு அரசே ஏற்று நடத்த வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.	சென்னைக்கு அருகில் திருவொற்றியூர் நகரில் டைம்ஸ் ஆப் இந்தியா பத்திரிக்கை நிர்வாகத்தின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வந்த மருத்துவமனையை அரசாணை எண்.222, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, நாள் 12.09.2011–ன்படி அரசு ஏற்று 50 படுக்கை வசதியுடன் கூடிய மருத்துவமனையாக சிறப்பாக செயல்பட்டு வருகிறது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அ.சா.கு.எண் 38572/எஸ்2/2018–6, நாள் 4.11.2019)	டைம்ஸ் பவுண்டேஷனால் 50 படுக்கை வசதி கொண்ட மருத்துவமனைக் கட்டடம் கட்டவும், மருத்துவ உபகரணங்கள், மரச்சாமான்கள் மற்றும் ஆம்புலன்ஸ் ஆகியவற்றுடன் துறைக்கு ஒப்படை செய்ய 2009–ஆம் ஆண்டு அரசாணை வெளியிடப்பட்டு, மருத்துவமனை ஒப்படை செய்யப்பட்டுள்ளது. துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
2	6	22	துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள் பல் மருத்துவர்களை நியமிப்பதற்கு தூரிதமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

	துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
	341 ஆரம்ப சுகாதார நிலையங்களில் பல் மருத்துவப்பிரிவு தேசிய நல வாழ்வு குழுமம் மூலம் ஏற்படுத்தப்பட்டு நல்ல முறையில் இயங்கி வருகிறது. இதில் 257 ஆரம்ப சுகாதார நிலையங்களில் பல் மருத்துவர்கள் உள்ளனர். காலியாக உள்ள 84 பல் மருத்துவ பணியிடங்களை அரசாணை எண்.16, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (அநமு2–2) துறை, நாள் 25.01.2019–இன் படி மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் மூலம் பல் மருத்துவர்களை நியமிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அ.சா.கு.எண் 38572/எஸ்2/2018–6, நாள் 4.11.2019)	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
3	14	42	திருவள்ளூர் மாவட்டத்தில், திருத்தணி திருக்கோயில் சார்பாக புதிய மருத்துவக் கல்லூரி மருத்துவமனை அமைக்க குழு அரசுக்கு பரிந்துரை செய்கிறது.

	துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
	மத்திய அரசின் கொள்கை முடிவின்படி இந்தியாவில் உள்ள மாநிலங்களில் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை இல்லாத மாவட்டத்தில் புதிய மருத்துவக் கல்லூரிகள் தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி 60% மத்திய அரசின் பங்களிப்பு தொகை மற்றும் 40% மாநில அரசின் பங்களிப்பு தொகையாகும். மேற்கண்ட திட்டத்தின்படி தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட மாவட்டங்களில் புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள் தொடங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 1. ராமநாதபுரம் 2. விருதுநகர் 3. நீலகிரி 4. திண்டுக்கல் 5. நாமக்கல் மற்றும் 6. திருப்பூர்	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

மேற்கண்ட மாவட்டத்தில் அரசு மருத்துவக் கல்லூரிகள் தொடங்குவதற்கான விரிவான திட்ட அறிக்கை மத்திய அரசின் அனுமதிக்காக அனுப்பப்பட்டது. இதனை தொடர்ந்து மத்திய அரசு தனது கடித எண்.U/14017/95/2019, ME II, நாள் 23.10.2019–இல் இதற்கான ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

மேலும் இதனை தொடர்ந்து மேலும் மூன்று அரசு மருத்துவ கல்லூரிகள் கீழ்க்கண்ட மாவட்டங்களில் தொடங்க விரிவான திட்ட அறிக்கை மத்திய அரசிற்கு 25.10.2019–இல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

1. கிருஷ்ணகிரி
2. நாகப்பட்டினம் மற்றும்
3. திருவள்ளூர்

இது தொடர்பாக மத்திய அரசின் ஒப்புதல் ஆணை எதிர்நோக்கப்படுகிறது.

(மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அ.சா.கு.எண் 38572/எஸ்2/2018–6, நாள் 4.11.2019)

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
4	15	45	மக்களின் உயிர் காக்கும் நோக்கில் அரசு மருத்துவர்கள் அனைவருக்கும் விபத்து மற்றும் அவசர சிகிச்சை குறித்த 12 வார கால online அல்லது நேரடி பயிற்சி கட்டாயமாக வழங்க குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
தற்போது அரசு மருத்துவமனைகளில் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவில் பணியாற்றும் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களுக்கு மருத்துவ கல்லூரி மருத்துவமனைகளில் விபத்தில் பாதிக்கப்படும் நபர்களுக்கு சிறப்பு சிகிச்சைகள் அளிப்பது தொடர்பாக அணிகள் வாரியாக சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அ.சா.கு.எண் 38572/எஸ்2/2018–6, நாள் 4.11.2019)	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
5	16	48	உணவு கலப்படம் குறித்து புகார் செய்ய துறையால் தெரிவிக்கப்பட்டுள்ள தொலைபேசி எண்ணை பொது மக்கள் அறிந்து கொள்ளும் வகையில் உரிய விளம்பரம் செய்யப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
உணவு கலப்படம் குறித்து புகார் செய்ய துறையால் தெரிவிக்கப்பட்டுள்ள தொலைபேசி எண்.9444042322 அனைத்து செய்தி தாள்கள், சமூக ஊடகங்கள் மூலம் பிரபலபடுத்தப்பட்டுள்ளது. உணவு வணிகங்கள், சுய உதவி குழுக்கள், பொதுமக்களுக்காக நடத்தப்படும் மாதாந்திர தொடர் விழிப்புணர்வு கூட்டங்களிலும் இந்த புகார் எண் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மாணவர்களிடையே பள்ளி, கல்லூரிகளில் நடைபெறும் விழிப்புணர்வு கூட்டங்களிலும் இந்த புகார் எண் தெரிவிக்கப்பட்டுள்ளது. உணவு பாதுகாப்புத் துறை மூலம் வழங்கப்படும் விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களில் இந்த எண் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்படுகிறது. உணவு சார்ந்த நிறுவனங்கள் மற்றும் பொது இடங்களில் இந்த தொலைபேசி எண் காட்சிபடுத்தப்பட்டுள்ளது மற்றும் அனைத்து மாவட்ட நியமன அலுவலர் அலுவலகங்கள் மற்றும் உணவு பாதுகாப்புத்துறை அலுவலகங்களிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அ.சா.கு.எண் 38572/எஸ்2/2018–6, நாள் 4.11.2019)	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
6	18	56	பொது மக்கள் 104 மருத்துவ சேவை குறித்து முழு தகவலை அறியும் பொருட்டு இன்னும் கூடுதல் அளவு விளம்பரம் செய்யப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
104 மருத்துவ உதவி சேவை குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு அனைத்து அரசு மருத்துவமனைகள், அலுவலகங்களில், இச்சேவை குறித்து விழிப்புணர்வு பலகைகள் இடம் பெற்றுள்ளன. அரசு அவசர ஊர்தி சேவையான 108 வாகனங்களிலும் 104 மருத்துவ உதவி சேவை குறித்த வாசகங்கள் இடம் பெற்றுள்ளன. மேலும், அனைத்து விதமான பயிற்சி புத்தகங்கள், நோய்தடுப்பு குறித்து விநியோகிக்க கூடிய அனைத்து துண்டு பிரசுரங்களிலும், பலகைகளிலும் 104 மருத்துவ உதவி, ஆலோசனை மற்றும் குறைதீர் சேவை குறித்து விழிப்புணர்வு வாசகங்கள் இடம் பெறச்செய்து, மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாகவே 104 மருத்துவ உதவி தகவல் மையம் ஆரம்பித்த 30.12.2013 நாள் முதல் 23.10.2019 வரை 40,29,973 அழைப்புகள் இம்மையத்தில் பெறப்பட்டு சேவைகள் வழங்கப்பட்டுள்ளன. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அ.சா.கு.எண் 38572/எஸ்2/2018–6, நாள் 4.11.2019)	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
7	24	75	குழுவிடம் கோரிக்கையாக வைக்கப்பெற்ற நரிக்குடி, திருச்சுழி, காரியாப்பட்டி, அருப்புக்கோட்டை, சாத்தூர், விருதுநகர் ஆகிய அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களை Universal Health Coverage Project மூலம் மேம்படுத்தத் துறை உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்
(5)

குழுவின் குறிப்புரை
(6)
துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

மேம்படுத்தப்பட்ட சேவைகள்

1. ஒருங்கிணைந்த சுகாதார சேவைகள்

சுகாதார மற்றும் நலமேம்பாட்டு மையத்தில் 12 விதமான ஒருங்கிணைந்த சுகாதார சேவைகள் வழங்கப்படும். அவைகள் முறையே நோய்த்தடுப்பு, சுகாதார மேம்பாடு, நோய்நீக்கம், மறுவாழ்வு மற்றும் நோய்தணிப்பு சேவைகளுக்கு தொடர்புடைய பேறுசார் மகப்பேறு பச்சிளங்குழந்தை, குழந்தைநலம் மற்றும் வளரிளம் பருவத்தினர் (RMNCH+A) தொற்றுநோய் தடுப்பு, தொற்றா நோய் கண்டறிதல் மற்றும் சிகிச்சை, கண் மருத்துவம், காது, மூக்கு, தொண்டை சிகிச்சை, பராமரிப்பு, மனநலம், முதியோர்கள் பராமரிப்பு, சிறு நோய் சிகிச்சை மற்றும் அவசர முதலுதவி சிகிச்சைகளையும் விபத்து மற்றும் அவசரகால சேவைகள் ஆகும். இடைநிலை சுகாதாரப் பணியாளர்கள் (MLHP) செவ்வனே இத்திட்டத்தை செயல்படுத்துகிறார்கள்.

2. 24X7 மணி நேர தொடர் சிகிச்சை

இத்திட்டம் செயல்படுத்தப்படும் அனைத்து கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் மற்றும் துணை சுகாதார நிலையங்களிலும் 24X7 மணி நேர தொடர் சிகிச்சை பொதுமக்கள் பெறும் வகைகளில் செவிலியர்களுக்கு ஒருங்கிணைந்த சுகாதார சேவைகளுக்கான பயிற்சி (Certificate Course in Comprehensive Primary Health Care) மற்றும் கூடுதல் கிராம சுகாதார செவிலியர்களுக்கு சமூக நல வாழ்வு பற்றிய செயல் முறையுடன் (Certificate Course in Community Health Care) கூடிய சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு, மருத்துவர்களின் ஆலோசனையின் மூலம் மருந்துகள் வழங்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

3. மக்கள் தொகை அடிப்படையாக கொண்டு தொற்றா நோய் கண்டறிதல் திட்டம் இத்திட்டத்தில் கிராமங்களில் உள்ள 30 வயதிற்கு மேற்பட்ட அனைத்து நபர்களுக்கும் மகளிர் சுய உதவிக் குழுவின் உதவியோடு தொற்றா நோய்கள் கண்டறியும் ஆய்வுகள் வீடுகளிலேயே செய்யப்பட்டு தேவைப்படுவோர்க்கு அருகிலுள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு பரிந்துரை செய்யப்படுகிறது.

மேம்படுத்தப்பட்ட வசதிகள்

1. விரிவான ஆய்வக சோதனைகள்

இத்திட்டம் 2018–2019ம் ஆண்டில் செயல்படுத்தப்பட்ட வட்டாரங்களில், அனைத்து அத்தியாவசிய விரிவான ஆய்வக சோதனைகளை பொதுமக்கள் எளிதில் பெற Hub & Spoke எனும் அமைப்பின் வாயிலான LIMS App-ன் உதவியோடு அவர்கள் வீட்டின் அருகாமையில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களிலேயே பரிசோதனை முடிவுகளை பெற வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

2. பராமரிப்பு பணிகள் மற்றும் புதிய கட்டிடங்கள்

இத்திட்டத்தில் முன் மொழிதல் மூலமாக பெறப்படும் பழுது பார்க்கும் வேலைக்கான கோரிக்கைகளுக்கும், புதிய கட்டிடங்களுக்கான கோரிக்கைகளுக்கும் அனுமதி அளிக்கப்பட்டு அமைக்கப்பட்டு வருகின்றன.

மேற்குறிப்பிட்டுள்ள அனைத்து சேவைகளும் வசதிகளும் விருதுநகரில் உள்ள நரிக்குடி, காரியாபட்டி, சாத்தூர் வட்டாரங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார மையங்களில் திறன்பட செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் விருதுநகர், அருப்புக்கோட்டை, திருச்சுழி ஆகிய வட்டாரங்களில் உள்ள கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்களில் இச்சேவைகள் வழங்கப்படுகின்றன.

(மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அ.சா.கு.எண் 38572/எஸ்2/2018–6, நாள் 4.11.2019)

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு – 3

மேலும் தொடர விரும்பும் பரிந்துரைகள்

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)	துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
1	1	4	பல்வேறு நிலைகளில் உள்ள பணிகளை துறை குறித்த காலத்திற்குள் முடிப்பதற்கு அனைத்து நடவடிக்கையினையும் மேற்கொள்ள வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.	தமிழ்நாட்டில் தற்போதுள்ள 1806 ஆரம்ப சுகாதார நிலையங்களில் 1705 ஆரம்ப சுகாதார நிலையங்கள் அரசு கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றன. 101 ஆரம்ப சுகாதார நிலையங்கள் வாடகையில்லா கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 59 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு சொந்த கட்டடம் கட்ட கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. தேசிய ஊரக நலத்திட்ட நிதி உதவி பெறப்பட்ட 9 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு நிலமாற்றம் மற்றும் மாற்றுநிலம் தேர்வு செய்தல் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 1 ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு தேசிய ஊரக நல நிதி உதவி கோரப்பட்டுள்ளது. 23 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு சொந்த கட்டடம் கட்ட நிலம் மற்றும் நிதி உதவி தேவைப்படுகிறது. இவை கிடைக்கப்பெற்ற உடன் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும். (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அ.சா.கு.எண் 38572/எஸ்2/2018–6, நாள் 4.11.2019)	குழு தனது அறிக்கையில் தெரிவித்தவாறு, 106 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கான கட்டடப் பணிகளின் நிலை குறித்த அறிக்கையை குழு அறிய விரும்புகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
2	2	9	போரூர் மற்றும் செம்மஞ்சேரி நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் 100 படுக்கைகள் கொண்ட 24 மணி நேரமும் செயல்படும், நகர சமுதாய நலவாழ்வு மையத்திற்கு அயற்பணி முறையில் கூடுதலாக மருத்துவர்களை நியமிப்பதற்கு, குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்
(5)

போரூர்

நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் 100 படுக்கைகள் கொண்ட 24 மணி நேர நகர சமுதாய நல வாழ்வு மையமாக செயல்படுகிறது. இம்மையத்தில் 7 மாநகராட்சி மருத்துவர்கள் மற்றும் 2 அயல்பணி மருத்துவர்கள், 3 சிறப்பு மருத்துவர்கள் (மகப்பேறு, மயக்கவியல், குழந்தைகள் நலம்) ஆக மொத்தம் 12 மருத்துவர்கள் பணிபுரிகின்றனர். மேலும் இம்மையத்தில் நாளொன்றுக்கு சராசரியாக பயனடையும் வெளி நோயாளிகளின் எண்ணிக்கை.424

மாதம் ஒன்றுக்கு சராசரியாக பயனடையும் உள்நோயாளிகளின் எண்ணிக்கை.120

மாதம் ஒன்றிற்கு சராசரியாக நடைபெறும் பிரசவங்கள்.10

செம்மஞ்சேரி

நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் 6 படுக்கைகளுடன் செயல்பட்டு வருகிறது. இம்மையத்தில் மொத்தம் 7 மருத்துவர்கள் பணிபுரிகின்றனர். மேலும் நாளொன்றுக்கு சராசரியாக பயனடையும் வெளிநோயாளிகளின் எண்ணிக்கை.91. மாதம் ஒன்றுக்கு சராசரியாக பயனடையும் உள்நோயாளிகளின் எண்ணிக்கை 2. மாதம் ஒன்றிற்கு சராசியாக நடைபெறும் பிரசவங்கள் 2. மேலும், செம்மஞ்சேரி மண்டலத்தில், 100 படுக்கை வசதி கொண்ட 24 மணி நேர நகர சமுதாய நல வாழ்வு மையம் புதிதாக கட்டப்பட்டு வருகிறது. கட்டிடம் கட்டி முடிந்தபின் பொது மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும்.

(மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அ.சா.கு.எண் 38572/எஸ்2/2018–6, நாள் 4.11.2019)

குழுவின் குறிப்புரை
(6)

செம்மஞ்சேரி நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் பயன்பெறும் உள்நோயாளிகளின் எண்ணிக்கை '2' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சரியான புள்ளி விவரம் குழுவிற்கு தெரிவிக்கவேண்டும் என்றும், 100 படுக்கை வசதி கொண்ட சமுதாய நலவாழ்வு மையத்தின் கட்டடத்திற்கான நிருவாக ஒப்புதல் அளித்த அரசாணை எண், அதன் மதிப்பீடு மற்றும் பணியின் தற்போதைய நிலை குறித்த விவரங்களை குழுவிற்கு அறிக்கையாக அனுப்பிவைக்கப்பெறவேண்டும் என்று குழு மீண்டும் பரிந்துரை செய்கிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
3	4	16	தாம்பரத்தில் செயல்படும் பெருநகர சென்னை மாநகராட்சி மருத்துவமனையை அரசே ஏற்று நடத்த வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
தாம்பரத்தில் செயல்படும் பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டின் கீழ் வருவதால் சென்னை பெருநகர மாநகராட்சி துறையின் குறிப்புரையை பெற்று வழங்குமாறு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையிடம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. அறிக்கை பெறப்பட்ட பின்னர் இத்துறையின் இறுதி முடிவு எடுக்கப்படும். (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அ.சா.கு.எண் 38572/எஸ்2/2018–6, நாள் 4.11.2019)	தாம்பரத்தில் செயல்படும் பெருநகர சென்னை மாநகராட்சியின் மருத்துவமனையை அரசு ஏற்று நடத்தவேண்டி சென்னை பெருநகர மாநகராட்சியின் குறிப்புரையை விரைந்து பெற துறை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும், மேலும், அறிக்கை பெற்றபின் அதனை அரசே ஏற்று நடத்தவேண்டி இறுதி முடிவு எடுக்கப்படவேண்டும் எனவும் குழு மீண்டும் பரிந்துரை செய்கிறது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
4	5	19	மேம்படுத்தப்பட்ட அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களில் மேம்படுத்தப்பட்டதற்கான அனைத்து வசதிகளையும் விரைந்து ஏற்படுத்தப்பட வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்
(5)

அரசாணை எண்.257, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறை, நாள் 21.07.2017–ன்படி 15 ஆரம்ப சுகாதார நிலையங்கள் தேசிய ஊரக நலத் திட்டத்தின் கீழ் மேம்படுத்தப்பட்டன. பொதுப்பணித்துறை மூலம் கட்டுமானப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

15 மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களின் கட்டுமானப் பணிகள் விவரம்:

12–கட்டடம் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

1–கட்டடப்பணிகள் நிறைவுற்று ஒப்படைக்கும் நிலையில் உள்ளன.

1 – கூரை அளவு

1 – பூச்சு வேலை

அரசாணை எண்.295, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 22.8.2017–ன்படி 9 ஆரம்ப சுகாதார நிலையங்கள் தேசிய ஊரக நலத்திட்டத்தின் கீழ் மேம்படுத்தப்பட்டன.

9 மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களின் கட்டுமானப்பணிகள் விவரம்:

7–கட்டடம் பயன்பாட்டில் உள்ளன.

1– பூச்சுவேலை

1–அடித்தளம்

அரசாணை எண்.153, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, நாள் 25.04.2018–ன்படி 12 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களாக தரம் உயர்த்தப்பட்டன. பொதுப்பணித்துறை மூலம் கட்டுமானப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

12 மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களின் கட்டுமானப்பணிகள் விவரம்:

10- கட்டடம் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

2– கட்டடப்பணிகள் நிறைவுற்று ஒப்படைக்கும் நிலையில் உள்ளன.

(மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அ.சா.கு.எண் 38572/எஸ்2/2018–6, நாள் 4.11.2019)

குழுவின் குறிப்புரை
(6)

துறையால் பல்வேறு நிலைகளில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகள் அனைத்தையும் முடிக்கப்பெற்று அப்பணிகள் குறித்த அறிக்கை ஒன்றினை குழுவிற்கு அனுப்பிவைக்கப்பெறவேண்டும் என்று குழு விரும்புகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
5	7	24	குழு, திண்டுக்கல் மாவட்டம், பழநி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயிலின் அருகில் இந்து அறநிலையத் துறைக்கு சொந்தமான இடமிருப்பதால், அங்கு அரசின் சார்பில் உயர் சிகிச்சை பிரிவுகளை உள்ளடக்கிய மருத்துவக் கல்லூரி மருத்துவமனை அமைக்க வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
ஒரு மருத்துவக் கல்லூரி தொடங்குவதற்கு தேவையான கட்டமைப்பு வசதிகள், மருந்துகள், மருத்துவ உபகரணங்கள், மருத்துவர்கள், மருத்துவப் பணியாளர்கள் ஆகிய அடிப்படை தேவைகளை ஏற்படுத்த சுமார் ரூ.300 கோடி அளவு நிதி தேவைப்படுகிறது. இந்த அரசானது மருத்துவக் கல்லூரி இல்லாத மாவட்டங்களில் புதிய மருத்துவக் கல்லூரி தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கடந்த 2012–2013 ஆம் ஆண்டு முதல் பின்வரும் மாவட்டங்களில் புதிய மருத்துவக் கல்லூரி தொடங்கப்பட்டு மாணவர் சேர்க்கை நடைபெறுகிறது. அதன் விவரம் இணைப்பில் தரப்பட்டுள்ளது. தற்போது 24 அரசு மருத்துவக் கல்லூரிகளில் மொத்தம் 3350 எம்.பி.பி.எஸ் மாணவர் சேர்க்கை நடைபெறுகிறது. மேலும் 15வது நிதி அறிக்கையை (15th Finance Commission) அரசுக்கு கீழ்கண்ட மாவட்டத்தில் திருப்பூர், நாமக்கல், திண்டுக்கல், உதகமண்டலம் மற்றும் கிருஷ்ணகிரியில் தலா ரூபாய் 350 கோடியில் மேற்கண்ட ஐந்து மாவட்டத்தில் மருத்துவக் கல்லூரியை நிறுவ ரூ.1750 கோடி (ரூ.350 கோடிX5) நிதி கேட்டு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. மேலும் அரசின் அறிவுரை பெற்று அரசு மருத்துவக் கல்லூரிகள் இல்லாத எஞ்சிய மாவட்டங்களிலும் படிப்படியாக புதியதாக மருத்துவக் கல்லூரிகள் தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் இது அரசின் கொள்கை முடிவாகும். (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அ.சா.கு.எண் 38572/எஸ்2/2018–6, நாள் 4.11.2019)	திருப்பூர், நாமக்கல், திண்டுக்கல், உதகமண்டலம் மற்றும் கிருஷ்ணகிரியில் மருத்துவக் கல்லூரி துவங்குவதற்கு ரூ.1750 கோடி தொகையினை பெற்று அதற்கான அரசாணை எண், விரிவான மதிப்பீடு மற்றும் பணியின் தற்போதைய நிலையினை குழுவிற்கு அறிக்கையாக அனுப்பிவைக்கப்பெறவேண்டும் என்று குழு மீண்டும் பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
6	8	26	பழநி, கீரனூர் மற்றும் கள்ளிமந்தையத்தில் ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருத்துவர்களை நியமிக்கக் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்
(5)

பழநி சுகாதார பகுதி மாவட்டத்தில் உள்ள டீ.கீரனூர் மற்றும் கள்ளிமந்தையம் ஆகிய மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் உள்ள மருத்துவ அலுவலர் பணியிடத்திற்கான விபரம் பின்வருமாறு:

வ. எண்.	ஆரம்ப சுகாதார நிலையம்	ஒப்பளிப்பு	இருப்பு	காலியிடம்
1	டீ.கீரனூர்	5	1	4
2	கள்ளிமந்தையம்	5	1	4

மேற்படி காலிப்பணியிடங்கள் மருத்துவ தேர்வாணைய குழு மூலம் பெறப்பட்டுள்ள பட்டியலிலிருந்து விரைவில் நிரப்பப்படும்.

(மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அ.சா.கு.எண் 38572/எஸ்2/2018–6, நாள் 4.11.2019)

குழுவின் குறிப்புரை
(6)

குழுவின் பரிந்துரை 5.7.2018 அன்று போவைக்கு அளிக்கப்பட்டு, எற்கெனவே அளித்த பதிலையே ஒரு வருடம் கடந்தும் மீண்டும் அளித்திருப்பதற்காக குழு தனது வருத்தத்தை பதிவு செய்கிறது. ஒரு மாத காலத்திற்குள் துறைச் செயலாளர் ஆய்வு செய்து உடனடியாக காலியிடங்களை நிரப்ப குழு மீண்டும் பரிந்துரை செய்கிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
7	9	29	துறை தெரிவித்தது போல் குறித்த காலத்திற்கு முன் தேவையான அனைத்து நடவடிக்கையினையும் மேற்கொள்ள வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்
(5)

திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள 52 ஆரம்ப சுகாதார நிலையங்களில், 15 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு சுற்றுச்சுவர் உள்ளது. மீதம் உள்ள 37 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு சுற்றுச்சுவர் கட்டப்பட வேண்டி உள்ளது.

2018–2019 ஆம் ஆண்டில் கடம்பத்தூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு முன்புறம் மட்டும் சுற்றுச்சுவர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டது.

37 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு சுற்றுச்சுவர் கட்ட பொதுப்பணித் துறையிடம் மதிப்பீடு பட்டியல் பெறப்பட்டு முன்னுரிமை அடிப்படையில் சுற்றுச்சுவர் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திருவாலங்காடு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலைய கட்டடம் கட்ட ரூ.135.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. கட்டடம் கட்ட தேர்வு செய்யப்பட்ட நிலம் தொடர்பாக பொது மக்கள் பிரச்சனை எழுப்பியதால் மாவட்ட ஆட்சியருக்கு விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சியர் மூலம் பிரச்சனை தீர்வு செய்யப்பட்டு நிலம் ஒப்படைக்கப்பட்ட பின்னர் கட்டுமானப்பணிகள் பொதுப் பணித்துறை மூலம் துவங்கப்படும்.

(மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அ.சா.கு.எண் 38572/எஸ்2/2018–6, நாள் 4.11.2019)

குழுவின் குறிப்புரை
(6)

துறையால் தெரிவிக்கப்பட்டுள்ள 37 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு படிப்படியாக சுற்றுச்சுவர் கட்டுவதற்கு உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளவேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது. மேலும், திருவாலங்காடு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலைய கட்டடம் கட்டுவதற்கான இடம் சரியான முறையில் தேர்வு செய்யாமல் ரூ.135 லட்சம் துறையால் பெறப்பட்டுள்ளதாக குழு கருதுகிறது. எனவே மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் உரிய நடவடிக்கையினை துறை மேற்கொண்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கான கட்டடம் கட்டப்பட வேண்டும் என்றும் குழு மீண்டும் பரிந்துரை செய்கிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
8	11	35	நுண்கதிர் வீச்சாளர் பதவியில் உள்ள காலிப்பணியிடங்களை ஒரு சிறப்பு நியமனம் (Special Drive) மூலம் நிரப்பத் துறை மருத்துவ பணிகள் தேர்வு வாரியத்தினை வலியுறுத்த வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
அரசு மருத்துவமனைகளுக்கு 2018–இல் மருத்துவ பணியாளர் தேர்வு வாரியம் மூலம் 80 நுண்கதிர் வீச்சாளர் பணியிடங்கள் நிரப்பப்பட்டு, பணியாளர்கள் சிறப்பாக பணிபுரிந்து வருகின்றனர். (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அ.சா.கு.எண் 38572/எஸ்2/2018–6, நாள் 4.11.2019)	குழுவின் அறிக்கை அளிக்கப்பட்டது 2018–ஆம் ஆண்டில், நுண்கதிர் வீச்சாளர் பணியிடங்கள் எப்போது நிரப்பப்பட்டன என்பது குறித்த விவரத்தை அறிய குழு விரும்புகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
9	17	52	சொந்த கட்டடம் கட்ட துறையால் நிர்ணயிக்கப்பட்டுள்ள எண்ணிக்கைக்கு உரிய நிதியினை பெற்று உடன் அது தொடர்பான நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
தமிழ்நாட்டில் தற்போதுள்ள 1806 ஆரம்ப சுகாதார நிலையங்களில் 1705 ஆரம்ப சுகாதார நிலையங்கள் அரசு கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றன. 101 ஆரம்ப சுகாதார நிலையங்கள் வாடகையில்லா கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றன.	விருதுநகர், சிவகாசி, வடபட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்பட்டுவிட்டதா என்பதை அறிய குழு விரும்புகிறது.
இவற்றில் 59 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு சொந்த கட்டடம் கட்ட கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. தேசிய ஊரக நலத்திட்ட நிதி உதவி பெறப்பட்ட 9 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு கட்டுமானப் பணிகள் துவங்கப்பட உள்ளன. சொந்த கட்டடம் கட்ட தேசிய ஊரக நல நிதி உதவி பெறப்பட்ட 9 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு நிலமாற்றம் மற்றும் மாற்றுநிலம் தேர்வு செய்தல் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 1 ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு தேசிய ஊரக நல நிதி உதவி கோரப்பட்டுள்ளது. 23 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு சொந்த கட்டடம் கட்ட நிலம் மற்றும் நிதி உதவி தேவைப்படுகிறது. இவை கிடைக்கப்பெற்ற உடன் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும். நிலம் தேர்வு செய்து கட்டுமானப் பணிகள் மேற்கொள்ள பொதுப்பணித் துறையிடம் ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அ.சா.கு.எண் 38572/எஸ்2/2018–6, நாள் 4.11.2019)	

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
10	21	66	துறையால் தேர்வு செய்யப்படும் இடத்தில் Accident Trauma Care Centre மற்றும் Emergency Stabilization Centre ஆகியவை முறையே அமைக்கப்பெற வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
இவ்வியக்கக கட்டுப்பாட்டின் கீழ்கண்ட மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் (Accident Trauma Care Centre மற்றும் Emergency Stabilization Centre) மத்திய மாநில அரசு பங்களிப்பு, நிதியின் கீழ் (60 40) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு விபத்து மற்றும் அவசர சிகிச்சை மையங்கள் அமைக்கப்பட்டு சிறப்பான முறையில் செயல்பட்டு வருகிறது. 11–ஆம் ஐந்தாண்டு திட்டத்தின் கீழ் கன்னியாகுமரி, திருநெல்வேலி, கீழ்பாக்கம், வேலூர், மதுரை ஆகிய 5 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் திண்டுக்கல், கரூர், கோவில்பட்டி, கிருஷ்ணகிரி, ஆகிய 4 மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் செயல்பட்டு வருகிறது. 12–ஆம் ஐந்தாண்டு திட்டத்தின் கீழ் செங்கல்பட்டு மற்றும் கோயம்புத்தூர் ஆகிய 2 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும், கும்பகோணம் மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய இரண்டு மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் செயல்பட்டு வருகிறது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அ.சா.கு.எண் 38572/எஸ்2/2018–6, நாள் 4.11.2019)	குழுவின் பரிந்துரை திண்டுக்கல் வடமதுரையில், Accident Trauma Care Centre மற்றும், மணப்பாறையில் Emergency Stablization Centre அமைப்பது குறித்ததாகும். அது பரிசீலிக்கப்பட்டதா என்பது குறித்த ஓர் அறிக்கையை துறை அளிக்க குழு விரும்புகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
11	22	69	குழு தமிழ்நாட்டில் செயல்படும் வட்டம் சார்ந்த அரசு மருத்துவமனைகளில் படிப்படியாக (Phased Manner) சி.டி.ஸ்கேன் இயந்திரம் நிறுவப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

			துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
			29 மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளிலும் மற்றும் 27 அரசு தாலுகா மருத்துவமனைகளிலும் சிடி. ஸ்கேன் வசதி ஏற்படுத்தப்பட்டு சிறப்பாக பொது மக்களுக்கு சேவையாற்றி வருகிறது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அ.சா.கு.எண் 38572/எஸ்2/2018–6, நாள் 4.11.2019)	வட்டம் சார்ந்த அரசு மருத்துவமனைகள் அனைத்திலும் சிடிஸ்கேன் வசதி செய்து தரப்பட்டுள்ளதா என்பதை அறிய குழு விரும்புகிறது.
வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)	
12	23	71	குழுவிடம் கோரிக்கை வைக்கப்பட்ட காரணத்தால் துறை இது குறித்து உரிய நடவடிக்கையினை மேற்கொண்டு, தாய்–சேய் நல மையத்தை மேம்படுத்த உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.	
			துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
			திருவள்ளூர் மாவட்டம் எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் லட்சிவாக்கம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. திருவள்ளூர் மாவட்டம் எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் பெரியபாளையம் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் 2001–ஆம் ஆண்டிற்கு முன்னரே மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தப்பட்டு நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. எனவே, இதே ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள லட்சிவாக்கம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை. லட்சிவாக்கம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் உட்கட்டமைப்பு வசதியை மேம்படுத்தும் பொருட்டு 2019–2020 ஆம் ஆண்டு செவிலியர் குடியிருப்பு கட்ட ரூ.25.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டுமானப்பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அ.சா.கு.எண் 38572/எஸ்2/2018–6, நாள் 4.11.2019)	திருவள்ளூர், லட்சிவாக்கத்தில் அமைந்துள்ள தாய்–சேய் நல மையம் போதுமான வசதிகளுடன் உள்ளதா என அறிய குழு விழைகிறது.

கி. சீனிவாசன்,
செயலாளர்.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS